**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்தினால் விருசிசு பிரதீப செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் வருடத்தில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 136 பிள்ளைகளுக்கு ரூபா 25,000 வீதம் சேமிப்பு வைப்புக் கணக்கு தொடங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக வணிக வங்கியொன்றினால் ஒரு பிள்ளைக்காக ரூபா 10,000 வீதம் | டீ.எவ்.சீ.சீ வங்கியினால் நேரடியாக உதவித் தொகை பெறுவோருக்காக வங்கிக் கணக்கு திறக்கப்பட்டு பணம் வைப்புச் செய்யப்பட்டமையால் அத் தொகை நிதியத்திற்குப் பெறுவனவு அல்லது நிதியத்தினால் | நன்கொடை தொடர்பான கணக்கின் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 1,360,000 ஆன பங்களிப்பொன்று காட்டப்பட்டிருந்ததுடன் இந் நன்கொடை தொடர்பான கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம் கணக்குகளில் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும், இவ்வாறான நன்கொடைகள் எதிர் காலத்தில் குறிப்பொன்றாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வீட்டுச் செயற்திட்ட நிர்வாகச் செலவுகள் | 2,849,687 | நிதியத்தால் செயற்படுத்தப்படுகின்ற இந்த மெத் செவன பகுதி வீடமைப்புதவித் திட்டத்தின் நிர்வாகச் செலவுகளாக வீட்டுதவி தொகையில் 01 சதவீதம் அதாவது ரூபா 2,849,687 மீளாய்வாண்டில் முப்படைகள் மற்றும் பொலிஸாரின் கணக்குகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அத் தொகையில் வருடத்திற்குள் செலவிடப்பட்டிருந்த உள்ளபடியான செலவு அல்லது செலவின் தன்மை வெளியிடப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்திற்கான முப்படையாளர் மற்றும் இலங்கை பொலிஸார் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற எரிபொருள், வாகன வாடகை மற்றும் எழுது பொருட்கள் போன்ற செலவுகளுக்காக நிர்வாகச் செலவுகள் வழங்குவதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு படையினருக்கும் எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற நிர்வாகச் செலவுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள், அறிக்கையொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | மேற்கொள்ளப்ப டுகின்ற உள்ளபடியான நிர்வாகச் செலவுகள் இனங்காணப்படுதல் மற்றும் அறிக்கையிடப்படுவதற் கான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீட்டுதவி தவணைக் கொடுப்பனவு | 68,192,020 | நிதியத்தால் தெரிவு செய்யப்பட்ட 288 பயனாளிகளுக்கு விடுவிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 68,192,020 ஆன தொகையொன்று முப்படையாளர் மற்றும் பொலிஸாரின் கணக்குகளுக்கு | நிதியத்தின் நிதி ஏற்பாடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மதிப்பீட்டுப் பத்திரத்தின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் நிதி ஏற்பாடுகள் பயனாளிகளுக்கு | வழங்கப்படுகின்ற உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதை உரிய பயனாளிகள் மூலம் உறுதிப்படுத்து வதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அத் தொகை குறிப்பிட்ட காலப்பகுதியில் பயனாளிகளுக்கு செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையாகச் செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் பதிவேடொன்று அந்தந்த முப்படையினர் மூலம் எதிர்காலத்தில் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஆ) ´றும் சுற்றறிக்கை வழிகாட்டி இலக்கம் 04. | ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் நிதியத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்ய முடியுமான வகையில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் வருடத்திற்காக அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டறிக்கை குறிப்பிட்டதன் பிரகாரம் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 877(2)(ஆ) மற்றும் சுற்றறிக்கை வழிகாட்டி 04 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 756 | நிதியத்திற்கு உரித்தான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,890,415 ஆன யானைத் தந்தத்தினால் செதுக்கப்பட்டு மாணிக்கம் பதிக்கப்பட்ட ஒட்டக உருவப் படம் சனாதிபதி செயலகத்தில் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது வருடாந்த சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உறுதிப்படுத்லொன்று சனாதிபதிச் செயலகத்திலிருந்து வருடாந்தம் பெறப்பட்டு சரி பார்க்கப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக்கொள்ளப் பட்டது. | நி.பி 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தினால் மத்திய வங்கியில் பேணப்பட்டு வருகின்ற 51001 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் 2021 ஆம் வருடத்தில் ரூபா 3,910,317 ஆன சராசரி மாதாந்த மீதியொன்று காணப்பட்டு வந்ததுடன், ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட மீதியொன்று 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தது. இம் மிகைப் பணம் பயனுள்ள முதலீட்டு வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியத்தின் நடைமுறைக் கணக்கு மீதியில் உள்ள மிகைப் பணம் பயனுள்ள முதலீடுகளைச் செய்வதற்கான அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதியத்தின் திட்டமிட்ட பணிகளுக்கான நிதித் தேவையை தீர்மானித்து மிகைப் பணம் முதலீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.8 முதலீட்டு முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்திற்குச் சொந்தமான இரண்டு நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்து 45 நாட்கள் தொடக்கம் 37 நாட்கள் வரை தாமதமாகி மீள் முதலீடு செய்யப்பட்ட காரணத்தால் நிதியத்தினால் இழக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட குறைந்த பட்ச வட்டி வருமானம் ரூபா 3,494,141 ஆக அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் விடயப்பரப்பு திருத்தியமைக்கப்பட்டமை, புதிய பதவியணியொன்றுனுள் கீழ் நிதியத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் மற்றம் வங்கி நடவடிக்கைகளுக்காக பதவியணியை மீண்டும் பதிவு செய்தமை போன்ற காரணங்களில் நிலையான வைப்புக்கள் மீள் முதலீடு செய்யப்படுவது தாமதமாகியது. எதிர்காலத்தில் தாமதங்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உறுதியான முன் திட்டமிடலின் படி பொருளாதார ரீதியில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு மற்றும் கணிசமான முதலீட்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 34,987,345 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 79,023,742 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 44,036,397 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு ‘‘மெத் செவன’’ வீட்டு நலன்கள் கொடுப்பனவு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 56 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெத் செவன செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் வருடத்திற்கான 150 போர் வீரர்களின் நலனுக்காக ரூபா 105,980,000 செலுத்தப்பட்டு முடிப்பதற்கு திட்டமிடப்பட்டும் 2021 ஆம் வருடத்தில் எவ்வித தவணைப்பணமொன்றும் செலுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது. | 2020 ஆம் வருடத்தில் நலன்கள் செலுத்தப்பட்ட போது ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 ஆம் வருடத்தின் பகுதி வீடமைப்புத் திட்டம் செயற்படுத்துவதில் தாமதமேற்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மரணித்த மற்றும் ஊனமுற்ற படைவீரரின் 2019 ஆம் வருடத்தில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்ற 137 பிள்ளைகளுக்கு ரூபா 25,000 வீதம் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் 15 மாத காலமொன்றால் தாமதமாகி இருந்ததுடன், மேலும் 2020 ஆம் வருடத்தில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்ற 130 பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்குதல் நடவடிக்கைகள் 2021 ஆம் வருடத்தின் யூன் 30 ஆம் திகதி வரையில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையில் உதவித் தொகை வழங்கப்படுவதற்கு முடியாதிருந்தது. | 2019 ஆம் வருடத்தில் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்ற படையினரின் பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்குதல் நாட்டில் நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆம் வருடத்திற்குள் உதவித் தொகை வழங்கப்படுவதற்கு முடியாதிருந்தது. 2020 ஆம் வருடத்திற்கான உதவித் தொகை வழங்குதல் விரைவில் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 இன் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 பிரிவின் பிரகாரம் நிதியத்தின் 2018 தொடக்கம் 2020 வரையான நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2018 மற்றும் 2019 ஆம் வருட இறுதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி பொழிப்பு அறிக்கைகள் மொழி பெயர்ப்பு செய்யப்படுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மொழி பெயர்ப்பு முடிவடைந்தும் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(ஆ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வருடாந்த பாதீடு நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்கத் தயாரித்து முறையான அங்கீகாரத்துடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்திற்கான வருடாந்த பாதீடு கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. 2022 ஆம் வருடத்திற்கான வருடாந்த பாதீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென்பதை தெரிவிக்கின்றேன். | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |